**கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டப்பகுதி – 03 - 2019**

---------------------------------------------------------------------------------------------------------------------

**-----**கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டப்பகுதி – 03 இன் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்திற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏடிபீ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2016 ஆகஸ்ட் 11 ஆம் திகதிய 3448 மற்றும் 3349 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.03 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின்154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள் நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம் உள்ளக உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைநிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் கொழும்பு மாநகர சபை மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை என்பன அமுலாக்கல் முகவராக உள்ளன. கொழும்பு பெரும்பாக பகுதியிலுள்ள நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் சேவைகளின் முறைமை வினைத்திறன் மற்றும் நிதிசார் நிலைத்திருக்கும் தன்மையை முன்னேற்றுதல் நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாக உள்ளது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 16401.76 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 112.83 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 13083.03 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 90 மில்லியனை நிதியளிப்புச்செய்வதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி இணங்கியிருந்தது. மிகுதித்தொகையான ரூபா 3318.73 மில்லியன் இலங்கை அரசாங்கத்தினால் நிதியளிப்புச்செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2010 ஏப்ரல் 09 ஆந் திகதியில் ஆரம்பித்ததுடன் 2016 நவமிபர் 3 ஆந் திகதியளவில் முடிவுறுத்துவதற்கு பட்டியலிடப்பட்டது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் காலப்பகுதியானது 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத்

தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது
செயற்திட்ட நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.
இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | விளைவு | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளர் பரிந்துரை |
|---|---|---|---|---|
| 1987 03ஆம் இலக்க பொது ஒப்பந்தச்சட்டத்தின் பிரிவு 6 (01) இன் படி | ரூபா 5 மில்லியன் அல்லது அதற்கு மேற்பட்ட கிரயமுடைய ஒப்பந்தத்தை பெற்றுக்கொண்ட ஒப்பந்ததாரர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதிலிருந்து 60 நாட்களிற்குள் பொது ஒப்பந்த பதிவாளரிடம் பதிவுசெய்ய வேண்டும் மேலும் ஒப்பந்த உடன்படிக்கை பொது ஒப்பந்த பதிவாளரிடம் பதிவுசெய்யப்பட வேண்டும் எவ்வாறாயினும் கட்டுமான ஒப்பந்தத்தை பெற்றுக்கொண்ட ஒப்பந்ததாரர் தேவைப்பாட்டுடன் இணங்கியிருக்கவில்லை | ஒப்பந்ததாரரிற்கு எதிராக சட்டம்இ வரி தொடர்பாகநடவடிக்கை எடுக்க முடியாதிருக்கும் | சட்டத் தேவைப்பாட்டுடன் இணங்குவது தொடர்பாக ஒப்பந்ததாரருக்கு அறிவிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்பது. | ஒப்பந்ததாரர் சட்டத் தேவைப்பாட்டுடன் இணங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

கொழும்பு பெரும்பாலான பகுதியில் உள்ளக நீரின் தரம் மற்றும் சுகாதாரத்தன்மையை மேம்படுத்தும் நோக்குடன் நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்பாடுகள் 03 கூறுகளின் கீழ் அமுல்படுத்தப்படுகின்றன. (a) கொழும்பு தெற்கு பகுதியிலுள்ள கழிவுநீர் வலையமைப்பினை புனரமைத்தல் மற்றும் விரிவுபடுத்தல். (b) கொழும்பு தெற்கு பகுதியில் இரண்டாம் தர கழிவு நீர் தரப்படுத்தும் கட்டமைப்பினை நிறுவுதல் (c) நிறுவக கட்டமைப்பு மற்றும் இயலுமையை பலப்படுத்தல் கிடைத்த தகவல்களின்படி ரூபா 13,471.16 ற்கு சமனான 92.67 ஐக்கிய அமெரிக்க டொலரின் ரூபா 2151.79 இற்கு சமனான 12.59 ஐக்கிய அமெரிக்க டொலரே 31.12.2019 வரை பயன்படுத்தப்பட்டிருந்தது. 3 வருட நிகழ்ச்சித்திட்டமானது கடந்திருந்தது. எவ்வாறாயினும் மிகுதிக் காலத்தில் மீதமிருக்கும் நிதியினை பயன்படுத்தி முடித்தல் சந்தேகத்திற்குரியது. நிகழ்ச்சித்திட்டத்தின் பௌதீக செயலாற்றல் கீழ்வருமாறு.

### 3.1 செயற்திட்ட வேலைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்

| கூறுகள் | கணக்காய்வு விடயம் | விளைவுகள் | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளர் பரிந்துரை |
|---|---|---|---|---|
| **A.** புதிய நீர் பிடிப்பு வலையமைப்பிற் | எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றுகை | நிகழ்ச்சித்திட்டத்திற்கு மேலதிக விரயம் ஏற்படல் | ஒப்பந்தகாரரின் வினைத்திறனின்மை தொடர்வதோடு | செயற்திட்ட முகாமைத்துவ அலகானது |

| | | | | |
|---|---|---|---|---|
| கான ஏற்பாடுகள் கிருளப்பன குடியிருப்பிற்கான அழுத்த நிலையங்கள் | 95% மாக காணப்பட்ட பொழுதிலும் 39% மானவை மட்டுமே அடைய முடிந்தது. ஒப்பந்தகாரரின் திறனற்ற திட்டமிடல் வழங்களின் தொடர்பற்ற தன்மை மற்றும் தலவத்த தோட்ட நிலத்தை ஒப்பந்ததாரருக்கு வழங்களில் தாமதம் காரணமாக தாமதம் ஏற்பட்டுள்ளது. | மற்றும் எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்தை நிகழ்ச்சித்திட்டத்தின் காலப்பகுதியில் அடைய முடியாதிருக்கும். | தேவையான வளங்களின் தொடர்பற்ற தன்மை மற்றும் வினைத்திறனற்ற திட்டமிடல் காரணமாக மாத இலக்கினை அடைய முடியாதுள்ளது. | சரியான முகாமைத்துவ மற்றும் மேற்பார்வை முறைமையை அமுல்படுத்தி மேலதிக கிரயம் மற்றும் நேரத்தை தவிர்க்க வேண்டும். |
| **b.**வெள்ளவத்தை கழிவு நீர் தரப்படுத்தும் நிலையத்தை நிறுவுதல் | அமைச்சரவைக்கான பத்திரம் கேள்விப்பத்திரத்திற்கான அனுமதியை பெற மற்றும் ஒப்பந்தத்தை வழங்குவதற்கும் காத்திருக்கிறது. | நிகழ்ச்சி திட்டத்தின் செயற்பாடுகள் மற்றும் நோக்கம் நிகழ்ச்சித்திட்டத்தின் காலப்பகுதிக்குள் அடைய முடியாதிருக்கும் | அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது மற்றும் கேள்விப்பத்திரம் 2020 ஆம் ஆண்டில் விநியோகிக்க முடியும். | ஒப்பந்தத்தை வழங்க துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் |
| **c.**நாரவேன்பிட்டிக்கான கழிவு நீர் பாதை வசதியினை வழங்கல். | நிலமின்மை காரணமாக கேள்விப்பத்திரம் வழங்களில் தாமதம் ஏற்பட்டுள்ளது. | அடைய வேண்டிய நோக்கத்தை நிகழ்ச்சித்திட்டத்தின் காலப்பகுதியில் அடைய முடியாதிருக்கும் | நிலமானது UDA இடமிருந்து CMC ஆல் குத்தகைக்கு எடுக்கப்பட்டிருந்த போதிலும் போதுமான நிதியின்மை காரணமாக இச் செயற்பாடானது தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. | ஒப்பந்தத்தை வழங்க துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் |
| **d.** தெற்கு பிடிப்பு பகுதியிலுள்ள பாதிக்கப்பட்ட கழிவு பாதையினை சீர் செய்தல் மற்றும் செயற்படுத்தல் | TEC மற்றும் CAPC யை நியமித்தலில் தாமதம் மற்றும் மீளமைக்கப்பட்ட ஆவணங்கள் அனுமதிக்கப்பட வேண்டியுள்ளது. | அடைய வேண்டிய இலக்கு மற்றும் செயற்பாடுகள் நிகழ்ச்சித்திட்டத்தின் காலப்பகுதிக்குள் அடையப்பட முடியாதிருக்கும் | காலத்திற்கு காலம் அமைச்சரவையின் மற்றும் நாட்டு நிலைமை , பொறியின் தன்மை போன்றன TEC மற்றும் CAPC நியமித்தலில் தாமதத்தை ஏற்படுத்தியுள்ளது. | ஒப்பந்தத்தை வழங்க துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| **e.**பொல்வத்தையிலிருந்து பம்பலபிட்டி வரை 1200mm Concrete trunk sewer ஐ நிறுவுதல் | TEC மற்றும் CAPC யை நியமித்தலில் தாமதம் மற்றும் கேள்விப்பத்திரத்திற்கு CAPC ன் அனுமதியை பெற வேண்டியுள்ளது. | அடைய வேண்டிய இலக்கு மற்றும் செயற்பாடுகள் நிகழ்ச்சித்திட்டத்தின் காலப்பகுதிக்குள் அடையப்பட முடியாதிருக்கும் | இம் முன்மொழிவு நிறுத்தப்பட்டு விட்டது. | நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கம் அடையப்பட முடியாது. |

**3.2. ஒப்பந்த நிர்வாகம்.**

| | கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளர் பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ---------------------- | ----------- | ------------------------------ | ---------------- |
| 01 | **கழிவுநீர் வலையமைப்பை நிறுவுதல் மற்றும் கிருலப்பனவில் 2 பம்புநிலயத்தை நிறுவுதல்.** | | | |
| | **அ)** ஒப்பந்தமானது 4 மே 2017ல் கைச்சாத்திடப்பட்டது. ஒப்பந்த முடிவுத் திகதி 14 மே 2020. இரண்டு காணித் துண்டு தேவைப்படுமிடத்தில் தலகெத்துக காணித்துண்டு 31 டிசம்பர் 2019 வரையில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | அட்டவணைப்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் முடிப்பதற்கு தாமதம் ஏற்படும். | தலகொத்துக காணித்துண்டை வழங்கலில் தாமதம் காரணமாக ஒப்பந்தம் முடிப்பதற்கு சிறிய தாமதம் ஏற்படும். | காணித்துண்டை வழங்க துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | **ஆ)** தலகொத்துவ காலணியானது ஒப்பந்தகாரருக்கு 31 டிசம்பர் 2019 வரை கையளிக்கப்படவில்லை . அத்துடன் ஒப்பந்தகாரர் 14 ஒக்டோபர் 2019 வரை ரூபா. 257,171,849 இனை நட்டத்தை பிரதியீடு செய்ய கோரியுள்ளார். | நிகழ்ச்சித்திட்டத்திற்கு மேலதிக கிரயமும் தண்டப்பணமும் செலுத்த வேண்டி ஏற்படும். | தலகொத்துவ நில கையளிப்பு தாமதத்தை ஒப்பந்த காரரின் பூரண வேலையின்மையாக கருதமுடியாது. கலிங்க மாவத்தையின் வேகமற்ற செயற்பாட்டுடன் ஒப்பிடும் பொழுது இது தலகொத்துவ பம்புநிலைவயமானது மிக நெருக்கமானது. அத்துடன் ஒப்பந்ததாரர் அட்டவணைப்படுத்தப்பட்டதிலும் பார்க்க மிகவும் பின்னே காணப்படுவதனால் தாமதக் கட்டணத்தினால் தேறிய தண்டப்பணம் ஒப்பந்தகாரர் கோரியதற்கு சமனாக அமையாது. | செயற்திட்ட முகாமைத்துவ அலகானது சீரான கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை செயற்பாட்டின் சாத்தியத் தன்மை மற்றும் கேள்விச் செயன்முறையில் செய்யவேண்டுவதுடன் இதனால் மேலதிக கிரயம் தாமதத்தை தவிர்க்முடியும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | **இ)** செயற்திட்ட முகாமைத்துவ அலகானது ரூபா 25,000,000 தை காணியை கொள்வனவு செய்ய 10 பெப்ரவரி 2020ல் செலுத்தியுள்ளது. இத்தொகை தலைமை பெறுமதி மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டினை விட ரூபா. 9,840,400 (65%) ஆல் அதிகமாகும். | பயனாளிகளிற்கு அடையவேண்டிய வசதிகள் சென்றடையமாட்டாது. | கும்பிக்கலேயில் பம்புநிலையத்தை நிறுவுவதற்கு காணித்துண்டை கொள்வனவு செய்யவேண்டியிருந்தது. இது வடிவமைப்பு மட்டத்தில் தெரிவு செய்யப்பட்டிருந்தது. அனைத்து காரணிகளையும் கருத்திற் கொண்ட பிற்பாடு நேரடிக் கொள்வனவு முறை தெரிவு செய்யப்பட்டது. அதாவது பிரதேச செயலாளரினூடாக கொள்வனவு செய்தல். ஆனால் இம்முறை காலதாமதத்தை ஏற்படுத்தியது மற்றும் மாற்றீடாக நேரடிக்கொள்வனவினூடாக கொள்வனவு செய்வதனூடாக 9,840,400 மேலதிக கிரயம் ஏற்பட்டதுடன் காணித் துண்டு ஒப்பந்த காரருக்கு வழங்கப்பட்டது. | செற்திட்ட முகாமைத்துவ அலகு சீரான மேற்பார்வை மற்றும் கண்காணிப்பை சாத்தியப்பாடு மற்றும் கேள்வி நடைமுறையில் மேற்கொள்ள வேண்டும். இதனுாடாக தாமத்தையும் மேலதிக கிரயத்தையும் தவிர்க்கமுடியும். |
| **02.** | **வெள்ளவத்தை கழிவுநீர் தரப்படுத்தல் நிலையத்தை நிறவுதல்.** | | | |
| | கழிவு நீர் தரப்படுத்தல் நிலையத்தை நிறுவுவதற்கான ஒப்பந்தமானது 26 ஒக்டோபர் 2018 இல் வழங்குவதற்கும் 4 பெப்ரவரி 2021 இல் பூரணப்படுத்துவதற்கும் எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும் இவ் ஒப்பந்தமானது 31 டிசம்பர் 2019வரை வழங்கபக்படவில்லை. | எதிர்பார்க்கப்படும் வசதிகள் பயனாளிகளை சென்றடையமாட்டாது. | Marine அகற்றுதல் நியமத்தில் CEA மாற்றமும் நான்கு சேர்ப்புகள், கேள்விதாரரால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கான பதில்களும் மற்றும் கொவிட் 19 பரவல் தாமதத்திற்கான பிரதான காரணமாகும் எவ்வாறாயினும் அமைச்சரவை பத்திரமானது சமர்ப்பிக்கப்பட்டதுடன் 2020 யூலையில் ஒப்பந்தத்தை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | ஒப்பந்தத்தை வழங்குவதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| **03.** | **கிருலவிலிருந்து நாரகன்பிட்டி வரை கழிவுநீர் வலையமைப்பு வசதியினை வழங்குதல்.** கிருலவிலிருந்து நாரகன்பிட்டியிலிருந்து பம்பலப்பிட்டி வரையான வலையமைப்பு மற்றும் திருத்தவேலைகள் Southern catchment கொள்ளவை மேம்படுத்தல் மற்றும் அமுல்படுத்தல் ஒப்பந்தமானது 4 டிசம்பர் 2018 இல் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 31 டிசம்பர் 2019வரை வழங்கப்படவில்லை. | எதிர்பார்க்கப்பட்ட பயன்கள் பயனாளிகளை சென்றடையமாட்டாது. | காணித்துண்டு இல்லாமையால் கிருல – நாரகன்பிட்டி வலையமைப்பு வடிவமைப்பு பலதடவைகள் மாற்றப்பட்டது. இதனால் தாமதம் ஏற்பட்டதுடன் Survey மற்றும் புனரமைப்பு முடிக்கப்பட முடியவில்லை. காணித்துண்டு இன்மை காரணமாக மற்றும் காணித்'துண்டு தொடர்பாக நிர்மானத்துறை எடுத்த பின்பும் அதை அடைவதற்கு தாமதம் ஏற்பட்டது. | ஒப்பந்தத்தை வழங்க துரித நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். |
| **04.** | **Trunk Sewer இனை பொல்வத்தவிலிருந்து பம்பலப்பிட்டி வரை நிறுவுதல்.** 1200MM கொங்கிறீற் Trunk Sewer கட்டுமானமானது 31 டிசம்பர் 2019ல் வழங்கப்பட்டிருந்தது. இந் நிகழ்ச்சியானது இன்னும் திட்மிடல் மற்றும் கேள்விப் பத்திர நிலமையிலேயே உள்ளது. | எதிர்பார்க்கப்பட்ட பயன்கள் பயனாளிகளை சென்றடையமாட்டாது. | இம் முன்மொழிவு நிறுத்தப்பட்டுள்ளது. மற்றும் எதிர்பார்க்கப்பட்ட அடைவு வேறு வழியில் திருப்பப்பட்டுள்ளது. பிரதானமாக முன்மொழியப்பட்ட கொள்ளுப்பிட்டியிலிருந்து பம்பலப் பிட்டி வரையான Marine City reclamation நில செயற்றிட்ட மற்றும் இது தற்பொழுது முடிவு செய்யப்பட்டுள்ளது. | நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கம் அடையப்படமாட்டாது. |

| | | | | |
|---|---|---|---|---|
| 05. | **தெற்கு பிடிப்புப் பகுதியிலுள்ள கழிவுநீர் வலையமைப்பினை புனரமைத்தல் மற்றும் தரமுயர்த்தல்.** | | | |
| | வடிவமைப்பு மற்றும் கேள்விப் பத்திரங்களை தயாரித்தல் என்பவற்றின் தாமதத்தினால் ஒப்பந்த வேலைகள் 31 டிசம்பர் 2019 வரை வழங்கப் பட்டிருந்தது. | எதிர்பார்க்கப்பட்ட பயன்கள் பயனாளிகளை சென்றடையமாட்டாது. | முன்மொழிவிற்கான முன்னுரிமை மாற்றமடைந்த பின்னர், BIB கூறிலுள்ள மிகுதி நிதியை பயன்படத்துவதற்க வேலை எல்லையானது மாற்றப்பட்டது கேள்வி கோரலானது முன்னுரிமை மற்றும் எல்லை மாற்றத்தால் தாமதமானது. | ஒப்பந்தத்தை வழங்க துரித நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். |

**3.3 சுற்றாடல் தொடர்பான விடயங்கள்**

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளர் பரிந்துரை |
|---|---|---|---|
| சுற்றாடல் அதிகாரி 22 ஒக்டோபர் 2018 இல் செயற்திட்டத்திலிருந்து விலகியுள்ளார்.கடன் ஒப்பந்தத்தின் படி செயற்திட்டத்தின் சுற்றாடல் செயற்திறன் ஒழுங்காக கண்காணிப்புச் செய்யப்பட வேண்டும் அதன்மேலான அறிக்கைகள் ஆண்டிற்கு இருமுறை கடன் முகவருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | செயற்திட்டத்தின் வேலை தொடர்பான சுற்றாடல் மதிப்பீட்டு ஒழுங்கு முறையாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுற்றாடல் மேற்பார்வை தொடர்பான தேவைப்பாடுகளை உறுதிசெய்ய தற்காலிக ஏற்பாடுகள் செய்யப்பட்டது. ஆட்சேர்ப்பு நடவடிக்கை ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தின் வேலைகளானது சுற்றாடல் முக்கியத்துவம் வாய்ந்ததால் இத்தேவைப்பாடானது கட்டாயமானது. ஆகையால் சுற்றாடல் அதிகாரியினை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.4 மனிதவள முகாமைத்துவம் தொடர்பான விடயங்கள்

| தொழில் நிலைகள் | புதவிகளின் எண்ணிக்கை | | | விளைவு | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளர் பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | அனுமதிக்கப் பட்டது | 2019 திசெம்பர் 31 இல் உண்மையான எண்ணிக்கை | வெற்றிடங்கள் | | | |
| கட்டுமான பொறியியலாளர் | 2 | 1 | 1 | செயற்திட்டத்தின் சீரான வேலைத் தொழிற்பாடுகள் பாதிக்கப்படும். | பிரதான பதவிகளை நிரப்புவதற்கு பலதடவைகள் முயற்சிக்கப்பட்டு விண்ணப்பங்களானது 2019 நவம்பர் கோரப்பட்டதுடன் ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டதால் தற்காலிகமாக ஆட்சேர்ப்பு செயன்முறை கைவிடப்பட்டதுடன் மீண்டும் கொவிட் 19 பரவல் நிலைமையினால் இப்பதவிகளானது மிண்டும் வெற்றிடமாக உள்ளதுடன் இவற்றை மீண்டும் தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பொருத்தமான நபர்களை நிரப்புவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் |
| செயற்திட்ட பொறியியலாளர் | 8 | 2 | 6 | | | |
| செயற்திட்ட உதவி பொறியியலாளர் | 7 | 3 | 4 | | | |

### 3.5 சுற்றாடல் தொடர்பான விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளர் பரிந்துரை |
|---|---|---|---|
| முகாமைத்துவ திணைக்களத்தின் 10ம் இலக்க 26 டிசம்பர் 2000ம் ஆண்டு சுற்று நிருபத்தின் பந்தி 8.1 இன் படி ஊளியர்களது ஆண்டுச் செயற்றிறனானது மதிப்பிடவேண்டும். | ஆண்டு செயற்றிறன் மதிப்பீடு ஊளியர்களை ஊக்கப்படுத்துவதற்கு செய்யப்படவேண்டும். | அனைத்து பதவிகளும் 1 வருட ஒப்பந்தத்தை கொண்டமைந்தது. வேலை ஒப்பந்தமானது ஊழியர்களது செயற்றிறனை அடிப்படையாக கொண்டு நீடிக்கப்படுகின்றது. | சுற்றுநிருபத்தோடு இணைந்து நடக்கவேண்டிய தேவைபாடு உள்ளது. |